**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 9/2014**

**Deposition of Witness for : PW.28**

**Name** : டாக்டர். ஜீலா
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02-11-2021.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது மதுரை ராஜாஜி மருத்துவ மனையில் பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 14.1.2009 ந் தேதி திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது காலை 10.45 மணிக்கு வேட்டவலம் காவல் ஆய்வாளர் பிரேத பரிசோதனை செய்வதற்காக பரிந்துரை கடிதம் வழங்கப்பட்டது. காவலர் சேகர் பிரேதத்தை அடையாளம் காட்டினார். இறந்து போன நபர் தோலா க/பெ. போட்டியா காலை 10.50 மணிக்கு உடல் கூராய்வுமேற்கொள்ளப்பட்டது. வெளிப்புறத் தோற்றம் - கை கால்கள் இயல்பு நிலையில் இருந்தது. கண்கள் மூடி இருந்தது. கருவிழி சுருங்கி இருந்தது. வாய் பாதி திறந்த நிலையில் காணப்பட்டது. நாக்கு மற்றும் பற்கள் இயல்பு நிலையில் காணப்பட்டது.

உள்புறத் தோற்றம் - தலை மற்றும் மூளையின் மேல் உள்ள ஜவ்வு இயல்பான நிலையில் இருந்தது. மூளை கூராய்வில் சிவந்து காணப்பட்டது. நெஞ்சுக் கூட்டில் உள்ள நுரையீரல் மற்றும் நெஞ்சுக்கூடு இயல்பு நிலையில் இருந்தது. கூராய்வில் சிவந்து காணப்பட்டது. வயிற்றுப் பகுதியில் கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம் இயல்பு நிலையில் இருந்தது. கூராய்வில் சிவந்து காணப்பட்டது. வயிறு இயல்பு நிலையில் இருந்தது. கூராய்வில் சிவந்து காணப்பட்டது. சிறுநீரகப்பை, ஆணுறுப்பு, தண்டுவடம் இயல்பு நிலையில் காணப்பட்டது. உள்ளுறுப்புகள் வயிறு, குடல். சிறுநீரகம், கல்லீரல், ரத்தம் ஆகியவை ரசாயண பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டது. உடல் கூராய்வு மதியம் 1 மணிக்கு நிறைவடைந்தது. இறந்தவர் பிரேத பரிசோதனைக்கு 10 -14 மணிக்கு நேரத்திற்கு முன்பாக இறந்திருப்பார். சென்னையில் உள்ள தடயவியல் ஆய்வகத்தின் கருத்து படி Organo Phosphorous Poison - ல் இறந்திருப்பதாக தெரியவந்தது.

கருத்துரை - இறந்தவர் Mono Phosphorous poison -ல். இறந்திருக்கிறார். நான் வழங்கிய பிரேத விசாரணை பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ 21.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** -

கொஞ்சம் விஷம் என்றால் மரணம் ஏற்படாது, அதிகப்படியான விஷத்தால் தான் இறப்பு நேரிடும். விஷம் சாப்பிட்டு இறந்தார் என்றால் அது லிவரில் கண்டிப்பாக தெரிந்து விடும் என்றால் சரிதான். மேலும் விஷமானது, முடி, எலும்பு, நகம், திசுக்கள் மூலமாக தெரியவரும் என்றால் சரிதான். விஷம் சாப்பிட்டார் நிறம் மாறி இருக்கும் என்று சொன்னால் கட்டாயமில்லை. சிறுநீரகத்தை வேலூர் தடய அறிவியல் துறைக்கு பகுப்பாய்வுக்காக அனுப்பினேன். நான் நேரடியாக சென்னை தடய அறிவியல் துறைக்கு பகுப்பாய்வுக்காக அனுப்பினேனா என்று ஞாபகம் இல்லை. விஷம் அருந்தி இருந்தால் துர்நாற்றம் ஏற்படும் என்று சொன்னால் சரியல்ல. பிரேதத்தின் மீது நாற்றம் இல்லை. விஷம் சாப்பிட்டால் நாக்கு, தொண்டை தீய்ந்து காணப்படும் என்றால் சரியல்ல. நான் முதலில் வேலூருக்கு அனுப்பிய தடய அறிவியல் துறையில் விஷம் இல்லை என்று அறிக்கை வந்தது என்றும் தற்போது தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- ஜீலா

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 9/2014**

**Deposition of Witness for : PW.29**

| | |
|---|---|
| **Name** | **:** டாக்டர். மலர்விழி |
| **Father Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02-11-2021.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் மருத்துவம் மற்றும் குடும்ப நலத்தில் துணை இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 13.1.2009 ந் தேதி திருவண்ணாமலை தலைமை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்த போது 13.1.2009 காலை 10 மணிக்கு தண்டராம்பட்டு தாலுக்கா ஆய்வாளர், வேட்டவலம் காவல் நிலையம் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட ஆணை படி குப்பபாய் க/பெ. பூண்டி, போந்தை கிராமம் என்பவரின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட போது பிரேத பரிசோதனை அறிக்கை மேற்கொள்ள காவலர் செல்வம், தானிப்பாடி காவல் நிலையம் என்பவரால் பிரேதம் அடையாளம் காணப்பட்டு பிரேத பரிசோதனை அன்று காலை 10.55 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. சராசரி உடற்கட்டு உடைய பெண் பிரேதமானது மல்லாந்து படுத்த நிலையில், இரண்டு கைகளும் பக்கவாட்டிலும், கால்கள் நீட்டிய நிலையில் காணப்பட்டது. இரண்டு கண்களும் மூடிய நிலையில் காணப்பட்டது. வாய்ப் பகுதி பாதி திறந்து இருந்தது. பற்கள் இயல்பு நிலையிலும், நாக்கும், வாயும் உள்பகுதியில் காணப்பட்டது. நாசித் துவாராங்கள் இயல்வு நிலையில் இருந்தது. காதுகள் இயல்பு நிலையில் இருந்தது. நான்கு புஜங்களும் நல்ல நிலையில் காணப்பட்டது. அவரின் நெஞ்சுக்கூட்டை திறந்து பார்த்த போது விலா எலும்புகள் நல்ல நிலையில் காணப்பட்டன. வலது மற்றும் இடது நுரையீரல்கள் சிவந்து காணப்பட்டது. கூராய்வு செய்தததில் ரத்தக் கசிவு காணப்பட்டது. இருதயம் கூராய்வு செய்தததில் நான்கு அறைகளிலும் ரத்தம் தோய்ந்து இருந்தது. வயிறு பகுதியை திறந்து பார்த்ததில் கல்லீரல், மண்ணீரல் சிவந்த நிலையிலும், கூராய்வில் ரத்தக் கசிவு காணப்பட்டது. இறைப்பை சிவந்த நிலையிலும், கூராய்வில் காலியாகவும் காணப்பட்டது. சிறுகுடல், பெருகுடல் சிவந்த நிலையிலும், கூராய்வில் ரத்தக் கசிவுடன் காணப்பட்டது. வலது மற்றும் இடது சிறுநீரகம் சிவந்த நிலையிலும், கூராய்வில் ரத்தக் கசிவுடன் காணப்படட்டது. அவரது மண்டை ஓட்டை உடைத்து பார்த்ததில் மூளை பகுதி சிவந்து காணப்பட்டது. முதுகு

தண்டுவடம் இயல்பான நிலையில் இருந்தது. இரைப்பை, சிறுகுடல், வலது சிறுநீரம், கல்லீரல் மற்றும் ரத்தம் ஆகியவற்றை ரசாயண பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டது. பிரேத பரிசோதனை 12.30 மணியளவில் முடிக்கப்பட்டது. மேற்படி நபர் பிரேத பரிசோதனைக்கு முன்பாக 12- 15 நேரத்திற்கு முன்பாக இறந்திருக்கக்கூடும். நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா. ஆ.22. பகுப்பாய்வு அறிக்கையில் இறந்த நபர் Organo Phosphorous Poison -ல் இறந்திருப்பதாக தெரியவந்தது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** -

நாங்கள் முதலில் வேலூர் தடய அறிவியல் துறைக்கு ஆய்வுக்காக அனுப்பி அறிக்கையில் விஷம் இல்லை என்றும் மது அருந்தி இருப்பதாக ஆதாரம் உள்ளது. சென்னை தடயஅறிவியல் துறைக்கு பகுப்பாய்வுக்காக நான் அனுப்பவில்லை. அதிகப்படியான விஷம் சாப்பிட்டு இருந்தால் எலும்பு, நகம், முடி, திசுக்கள் மற்றும் லிவரில் காணப்படும் என்றால் சரிதான். விஷம் சாப்பிட்டு இருந்தால் நாக்கு தொண்டை, வாய் கருநிறத்தில் காணப்படும் என்றால் இருக்கக்கூடும். பிரேதத்தில் துர்நாற்றம் ஏற்படவில்லை. போலீசார் பின்னிட்டு பெறப்பட்ட அறிக்கையில் விஷம் இருப்பதாக சொன்னதின் பேரில் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** - வேலூரில் விஷம் கண்டறியப்படாததால் தான் சென்னை தடய அறிவியல் துறைக்கு அனுப்பப்பட்டது. விஷம் குறைவானதா அல்லது அதிகமானதா என்பது அவரவர் உடல் நிலையை பொறுத்தது.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** - சென்னை தடவியல் துறைக்கு அனுப்பப்பட்ட தகவல் எனக்கு தரப்படவில்லை.

ஒம்/- மலர்விழி

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 9/2014**

**Deposition of Witness for : PW.30**

**Name** : டாக்டர். கே.வி. சீனுவாசன்

**Father Name** :

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02-11-2021.**

முதல் விசாரணை -

நான் தற்போது ஓமலூர் அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 12.1.2009 ந் தேதி நான் தானிப்பாடி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது 1. கோபால்சாமி என்பவர் என்னிடம் 5.15 மணியளவில் தான் சாராயம் குடித்ததாகவும், அதனால் தனக்கு வாந்தி, தலைசுற்றல், உடம்பு வலி மற்றும் உடம்பு எரிச்சல் இருப்பதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தததில் அவருடைய கருவிழி நல்ல நிலையில் இருந்தது. சுவாசத்தில் சாராய வாடை வீசியது. அவருக்கு முதலுதவி கொடுத்து திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அதற்காக நான் வழங்கிய விபத்து பதிவேடு அறிக்கை அ.சா.ஆ. 23. அன்றே குப்பாயி என்பவர் தான் சாராயம் குடித்ததாகவும், அந்த சாராயம் தன் வீட்டுற்கு அருகில் உள்ள மரத்திற்கு அருகில் இருந்ததாகவும், அதை அருந்திய பிறகு, வாந்தி, வயிற்று வலி, வயிற்றுபோக்கு, நாவறட்சி இருப்பதாக கூறினார். அவருக்கு முதலுதவி அளித்து மேல்சிகிச்சைக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அவருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேடு அறிக்கை அ.சா.ஆ. 24. அதே நாள் தோலா என்பவர் இரவு 8 மணிக்கு தான் சாராயம் குடித்ததாகவும், அதனால் அவருக்கு வயற்று வலி, அதிகப்படியான வேர்வை, தலைசுற்றல் இருப்பதாக கூறினார். அவருக்கு முதலுதவி அளித்து திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். நான் வழங்கிய விபத்து பதிவேடு அறிக்கை அ.சா. ஆ.25. மேலும், தண்டராம்பட்டு தாலுக்கா, போந்தை கிராமத்தைச் சேர்ந்த 55 வயது ஆண் ஜெயராமன், த/பெ. முத்துகிருஷ்ணன் என்பவரின் பிரேத பரிசேதனை மேற்கொள்ள வேண்டி திருவண்ணாமலை காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தினை பெற்று தலைமை காவலர் அன்பழகன் என்பவர் பிரேதத்தை அடையாளம் காட்டினார். 13.1.2009 12.15 மணிக்கு பிரேத பரிசோதனையை மேற்கொண்டேன். அவருடைய கை, கால்கள் விறைப்பு தன்மை காணப்பட்டது. சாதாரண உடல்வாகு கொண்ட ஆணின்

பிணமானது கை, கால் நீட்டிய நிலையில் காணப்பட்டது. கண்கள் மூடிய நிலையில், வாய் மூடிய நிலையிலும் காணப்பட்டது. கழுத்து பகுதியில் எந்தவிதமான காயங்களும் காணப்படவில்லை. நெஞ்சுக்கூட்டை பிளந்து பார்த்ததில் நாவடி எலும்புகள் நல்ல நிலையில் காணப்பட்டது. நுரையீரல் சிவந்து காணப்பட்டது. இருதய குறுக்கு வெட்டில் இருதய அறைகளில் ரத்தம் தோய்ந்து காணப்பட்டது. சிறுநீரகம் குறுக்கு வெட்டில் சிவந்து காணப்பட்டது. வயிற்றில் 200 மி.லி. திரவம் காணப்பட்டது. மண்டை ஓட்டு எலும்பை உடைத்து பார்த்ததில் மூளை, பேரன்டைமா பகுதி சிவந்து காணப்பட்டது. உள்ளுறுப்புகள் ரசாயண பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டது. பகுப்பாய்வு அறிக்கையில் இறந்த நபர் Organo Phosphorous Poison -ல் இறந்திருப்பதாக தெரியவந்தது. நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.26. பிரேத பரிசோதனை செய்வதற்கு 24 மணி நேரத்திற்கு முன்பாக அந்த நபர் இறந்திருக்கக்கூடும் என்று நான் கருத்துரை வழங்கினேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** -

கோபால்சாமி, தோலா, குப்பாயி ஆகியோர்களிடம் இருந்து ரத்தப் பரிசோதனை செய்யவில்லை. அவ்வாறு செய்திருந்தால் அவர்கள் சாராயம் எந்த அளவிற்கு குடித்திருந்தார்கள் என்ற விவரம் தெரியவரும் என்று சொன்னால் சரிதான். மேலும் விஷம் அருந்திருக்கிறார்களா என்பதும் தெரியவரும் என்றால் சரியல்ல. உடலுக்கு ஒப்பாத உணவை சாப்பிடும் போது வாந்தி வருவது சகஜம் என்றால் சரிதான். பி.பி. அதிகப்படியாக இருந்தாலும் மயக்கம் வரும். அதிப்படியான விஷம் சாப்பிட்டால் தான் மரணம் ஏற்படும் என்றால் சரியல்ல. வேலுருக்கு தடய அறிவியல் துறைக்கு அனுப்பப்பட்ட உள்ளுறுப்புகள் விஷத்தன்மை இல்லை என்று அறிக்கை வந்தது என்றால் சரிதான். சென்னைக்கு மேற்கொண்டு அந்த உள்ளுறுப்புகளை நான் அனுப்பவில்லை. சென்னை தடய அறிவியல் துறை வழங்கிய அறிக்கை படிதான் நான் இறந்த நபர் விஷத்தினால் இறந்திருக்கிறார் என்று அறிக்கை அளித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் பின்னிட்டு என்னிடம் அறிக்கை பெற்றார்கள் என்றால் சரியல்ல.

ஒம்/- சீனுவாசன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.